**071/23**

Total Number of Questions : 8

Time : 1.00 Hour

Max. Marks : 50

கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ் மொழியிலமைந்த பத்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

1. "தமிழ் மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்றாகும். 2500 வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்ட இலக்கியங்களைக் கொண்ட ஒரு மொழியாகும். தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் மிகப் பழமையான இலக்கியங்கள். இந்நூல்களில் தமிழர்களின் கலை, இலக்கியப் பண்பாட்டை உணர முடிகிறது. உலகில் உள்ள எல்லா ஊர்களும் நமது ஊர்தான் என்றும், உலகின் அனைத்து மனிதர்களும் நமது உறவினர்கள் தான் என்றும் காணும் மிகப் பெரிய சிந்தனையைக் கொண்ட இலக்கியங்கள் தமிழ் மொழியில் உள்ளன என்பது நமக்குப் பெருமை தருவதாகும்". **(20×1=20 Marks)**

2. "பெண்கள் முன்னேற்றம்" என்னும் தலைப்பில் 200 சொற்களுக்கு மிகாமலும் 100 சொற்களுக்குக் குறையாமலும் ஒரு பொதுக் கட்டுரை எழுதுக. **(10×1=10 Marks)**

கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, அதிலிருந்து கேட்கப் பட்டுள்ள 5 வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

"ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல கவசங்களால் மூடப்பட்டாற்போல ஆத்மா மூடப்பட்டிருப்பதாகக் கூறும் ஒரு குறிப்பைத் தைத்திரிய உபநிடதத்தில் காணலாம். எல்லாவற்றிற்கும் புறத்தே உள்ள கவசமே இந்த உடம்பு. அது அன்னத்தால், அதாவது உணவினால் ஆனது என்ற காரணத்தால் அதற்கு அன்னமய கோசம் என்று பெயர். கோசம் என்ற சொல்லுக்கு உறை என்பது கருத்து. இதற்குள்ளே இதைவிட நுட்பமாக உள்ளது பிராணமய கோசம். இதுவே சீவ சக்தி. இதற்குள்ளே உள்ளது மனோ மய கோசம் எனப்படும். இதற்குமுள்ளே உள்ளது அறிவால் ஆனது என்ற காரணத்தால் விஞ்ஞானமய கோசம் எனப்படும். இதற்குமுள்ளே உள்ளது ஆனந்தமய கோசம். இத்தனை உறைகளாலும் மூடப்பட்டு நடுவில் உள்ளதே ஆத்மா". **(5×2=10 Marks)**

3. தைத்திரிய உபநிடதத்தில் உள்ள குறிப்பு யாது ?

4. உடம்பை என்ன கோசம் என்று அழைப்பர் ?

5. பிராணமய கோசத்தின் மறு பெயர் யாது ?

6. ஆத்மா எத்தனை கோசங்களால் மூடப்பட்டுள்ளது ?

7. விஞ்ஞானமய கோசத்திற்குள் அமைந்துள்ள கோசம் யாது ?

கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்து, சொந்த நடையில் 50 சொற்களுக்கு மிகாத ஒரு பந்தியாகச் சுருக்கி எழுதவும். பொருத்தமான ஒரு தலைப்பையும் எழுதவும். **(10×1=10 Marks)**

8. "பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற எண்ணற்ற கூறுகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. இது மக்களின் வாழ்வியலை ஒட்டுமொத்தமாகக் கொண்டிருப்பதாகும். மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக் கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப் பெரும் அமைப்பாகும். இவ்வமைப்பில் ஆயிரமாயிரம் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவை பல பாங்குகளாக (Patterns) அமைந்துநிற்கின்றன. அவற்றின் ஒட்டுமொத்த அமைப்பு என்பது கணினி அல்லது விண்வெளிக் கலம் போன்ற சிக்கலான அமைப்புகளுடைய எந்திரத்தைப் போன்றது. இவ்வகை எந்திரங்களின் செயல்பாட்டிற்கு எவ்வாறு ஆயிரமாயிரம் உறுப்புகளைச் சிறப்பாக வடிவமைத்து இணைக்கிறார்களோ அவ்வாறே ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரமாயிரம் கூறுகள் மக்களால் காலங்காலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாடு என்னும் அமைப்பிற்குள் பொருத்தப்பட்டுள்ளன.

எந்திரத்தின் அமைப்பு கண்ணால் பார்க்கக் கூடியதாக உள்ளது. அதனுள் என்னென்ன உறுப்புகள் உள்ளன என்பதை அறிய முடிகிறது. ஆனால் பண்பாடு என்னும் அமைப்பு மக்களின் ஒட்டுமொத்த நடத்தை முறையின் வெளிப்பாடாக உள்ளது அதனுள் என்னென்ன உள்ளன என்பதை மறைமுகமாகவே இனங்காண முடிகிறது".

---